மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.60/2019

பெயர் – சங்கரலிங்கம் (பி.வா.சா.1)

நாள் – 22.02.2023

3ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.

என் தாத்தா பெயர் என்ன என்றால் சங்கரலிங்கசெட்டியார் ஆகும். என் பாட்டியின் பெயர் செல்லியம்மாள் என்றால் சரிதான். எனது தாத்தா மட்டும் பாட்டிக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் சண்முகவேல் செட்டியார், சுப்பையா ஆகும். குருவம்மாள், சின்னமாரியம்மாள், பெரியமாரியம்மாள் ஆகியோர்கள் சங்கரலிங்கசெட்டியாருக்கு என்ன உறவு என்றால் மகள்கள் ஆவார்கள். குருவம்மாளின் கணவர் பெயர் என்ன என்றால் தெரியாது. குருவம்மாளின் கணவர் பெயர் குருசாமி என்றால் தெரியாது. குருவம்மாள், மற்றும் குருசாமிக்கு வாரிசு கிடையாது என்றால் சரிதான். குருவம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெரியமாரியம்மாளின் கணவர் பெயர் குருசாமி செட்டியார் என்றால் சரிதான். பெரியமாரியம்மாளுக்கும், குருசாமி செட்டியாருக்கும் 3ம் பிரதிவாதியான இந்திரகுமாரி மகள் என்றால் சரிதான். சின்னமாரியம்மாள் திருமணம் செய்யாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. திருமணம் ஆனது. அவர்களுக்கு வாரிசு கிடையாது. சின்னமாரியம்மாளுக்கு கண் பார்வை கிடையாது. அவரை நான் தான் பார்த்து கொண்டேன். எனது அப்பா பெயர் சுப்பையா, அம்மா பெயர் கோமதிஅம்மாள் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி சோலைசாமி, 1ம் பிரதிவாதியான நான் மற்றும் 2ம் பிரதிவாதியான சின்னபாலு ஆகியோர்கள் சுப்பையா மற்றும் கோமதி அம்மாள் வாரிசுகள் என்றால் சரிதான். சங்கரலிங்கசெட்டியாரின் மகன் சண்முகவேல் செட்டியார் மனைவி பெயர் லட்சுமியம்மாள் என்றால் சரிதான். சண்முகவேல் செட்டியார் மற்றும் லட்சுமியம்மாளின் வாரிசுகள் 4ம் பிரதிவாதியான சுப்பம்மாள், 5ம்பிரதிவாதியான பாப்பா (எ) கணபதி என்றால் சரிதான். சுப்பயைாவுடன் பிறந்த சண்முகவேல் (எ) சண்முகம் செட்டியார், குருவம்மாள் , பெரியமாரியம்மாள், சின்ன மாரியம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது மனைவி

பெயர் என்ன என்றால் கண்ணகி  ஆகும். இந்த வழக்கில் 2 வது இலக்க சொத்தானது எனது தாத்தா சங்கரலிங்கசெட்டியாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

கு.வி. தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.